பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 08-2025 TUESDAY 6.30 PM

## தலைப்புச் செய்திகள்

1. உற்பத்திக்கான இந்தியா ; உலகிற்கான இந்தியா என்ற புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கல்விப்பணியில் அரசுப்பள்ளிகள் மிக முக்கிய பங்காற்றுவதாக மத்திய புள்ளியியல் துறை ஆய்வில் தெரியவந்துள்ளது.

3. தமிழகத்தில் பருவமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 3 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<>>>>>>

உற்பத்திக்கான இந்தியா – உலகிற்கான உற்பத்தி என்ற புதிய அத்தியாயத்தை இந்தியா தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் மின்வாகனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் அயன் பேட்டரிகளுக்கான Electrode-களை தயாரிக்கும் மையத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியா – ஜப்பான் நட்புறவின் அடையாளமாக இந்த மையம் திகழ்வதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த சுயசார்பு மிக்க நாடாக இந்தியா 2047-ல் உருவெடுக்கும் என்று கூறிய பிரதமர், நாட்டின் வளர்ச்சிக்கு ஜப்பான் நாட்டுடனான நட்புறவு மற்றும் கூட்டு முயற்சிகள் பெரிதும் உதவிடுவதாக குறிப்பிட்டார்.

இந்தியா வலிமையான ஜனநாயகத்தையும், வளர்ச்சிக்கான பூகோள அமைப்பையும், திறன் மிக்க பணியாளர்களையும் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியா ஒவ்வொரு நட்பு நாடுகளுடனும் இணைந்து வெற்றிக்கான இலக்குகளை அடைந்து வருவதாக அவர் கூறினார்

மாருதி சுசுகி போன்ற நிறுவனங்கள் உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தை அடையாளம் காட்டுபவையாக உள்ளன என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

தூய்மை எரிசக்தி மற்றும் தூய்மையான வாகன போக்குவரத்து ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்ட பிரதமர், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத தூய்மையை பராமரிக்கும் வகையிலான வாகனங்களை கொண்டுவருவது நாட்டின் எதிர்கால இலக்கு என்றும், இதில் உலகின் நம்பிக்கை மிகுந்த மையமாக இந்தியா இருக்கும் என்றும் கூறினார்.

அரசு மேற்கொண்ட வளர்ச்சிக்கான நடவடிக்கைகளால் மின்னணு துறையின் உற்பத்தி கடந்த பத்தாண்டுகளைவிட 500 மடங்கு அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்துக்கான தொழில்களை திட்டமிடும் முயற்சிக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

உற்பத்தியை ஊக்குவிப்பதோடு, தொழில்களுக்கு தேவையான தாதுக்களின் உற்பத்தியை உறுதி செய்யும் வகையிலும், தேசிய அளவிலான இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாக, குஜராத் மாநிலம் Halsalpur-என்ற இடத்தில் இ வித்தாரா என்ற நவீன ரக மின் வானங்களை உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தில் பிரதமர் தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் கல்வி பணியில் அரசு பள்ளிகள் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

நாட்டின் கல்வி வளர்ச்சி குறித்து இவ்வாண்டு நடத்தப்பட்ட ஆய்வில், அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவருக்கு ஒரு ஆண்டில் சராசரியாக 2 ஆயிரத்து 863 ரூபாய் செலவு செய்யப்படுவதாகவும், அதேசமயம் அரசு சாரா பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதற்கு மட்டும் அதிக தொகையை பெற்றோர் செலவிடுவதாகவும் அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக ஒரு மாணவனுக்கான கல்விச்செலவு ஆண்டுக்கு 7 ஆயிரம் ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தகங்கள், நோட்டுகள் வாங்குவதற்காக ஒரு மாணவனுக்கு சராசரியாக 2 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் கல்விக்காக அதிக செலவு செய்வதாகவும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பருவமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் அண்மையில் பெய்த மழையின்போது தேங்கியிருந்த தண்ணீர் ஒருமணிநேரத்திலேயே அனைத்து இடங்களிலும் வடிந்துவிட்டதாக கூறினார்.

ஒரே இடத்தில 20 சென்டிமீட்டருக்கும் கூடுதலாக மழை பெய்யும்போது தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளதாகவும், ஆனால் உடனடியாக வடியும் வகையில் அதற்கான வடிகால் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து நீர்நிலைகளிலும் தூர்வாரும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் திரு கே என் நேரு கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் புரட்டாசி மாத பெருமாள் கோவில்கள் சுற்றுலா அடுத்த மாதம் 17-ஆம் தேதி தொடங்கி, புதன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த புரட்டாசி சுற்றுலாவில் சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் உள்ள பிரசித்தி பெற்ற பெருமாள் கோவில்களை தரிசனம் செய்ய வசதி செய்துதரப்படும் என்று கூறியுள்ளார்.

மேலும், சென்னை மற்றும் சென்னையை சுற்றியுள்ள வைணவ திருக்கோவில்களுக்கு பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சுற்றுலா இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

இதேபோன்று, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் நகரங்களிலும் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சுற்றுலாவுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் இணையதளத்தில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவம் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சென்னை மாவட்டத்திற்கு புதிய காஜி நியமனம் செய்யப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை தகுதியுள்ளவர்கள் அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சேலம் மாநகர காவல்துறை, பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து, போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சியை நடத்தியது.

போதைப்பொருள் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு இயக்கத்தின்மூலம், போதைப்பொருள் விற்பனை மற்றும் நடமாட்டம் குறித்த தகவல்களை தங்களை பற்றி எந்தவித அடையாளத்தையும், வெளிப்படுத்தாமல் காவல்துறைக்கு தெரிவிக்கலாம் என்று சேலம் மாநகர காவல் உதவி ஆணையர் யாஸ்மின் தெரிவித்தார்.

*(Voice Byte – யாஸ்மின் – 20 Sec. )*

போதைப்பொருளுக்கு எதிரான இதுபோன்ற விழிப்புணர்வு இயக்கம் மாணவர்களை நல்வழிப்படுத்தும் என்றும், போதையில்லா சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும் என்றும் விழிப்புணர்வு இயக்கத்தில் கலந்துகொண்ட மாணவியர் தெரிவித்தனர்.

*(Voice Byte – மாணவியர் – 20 Sec. )*

<<<<<<>>>>>>

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் கடலோரப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்திப்பிரிவுக்கு இன்று அவர் அளித்த பேட்டியில், தமிழக கடலோரப்பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் அடுத்த மூன்று நாட்களுக்கு கடலுக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் – 60 Sec.)*

<<<<<<>>>>>>

## மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாநில அமைச்சர் திரு காந்தி இன்று தொடங்கிவைத்தார்.

------------

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, தருமபுரி மலர் சந்தையில் மல்லி, சம்பங்கி உள்ளிட்ட மலர்களின் விலை அதிகரித்துள்ளது.

------------- த

சென்னை மெட்ரோ ரயில் சேவை, நாளை விநாயகர் சதுர்த்தியன்று சனிக்கிழமை அட்டவணைப்படி இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 3 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் Koyal Bar தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் இளையோர் பிரிவில் Anik Modi-யும், ஆடவர் ஜுனியர் பிரிவில் Yash Khandagale-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் Sneha Soren வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் சீனியர் பிரிவில் Raja Muthupandi-யும் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------

கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sift Kaur Samra தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<<>>>>>>